# தமிழ் மொழியும் இலக்கியமும்

## தரம் 10

அலகு -2.0 இருபதாம் நூற்றாண்டுக் கவிதை

உப அலகு - 2.3 சுருக்கம்

Mr .A. SENTHILKUMAR (B.A)
K/Kathiresen National School,
Nawalapitiya.

| | | |
|---|---|---|
| பாடம் | - | தமிழ் மொழியும் இலக்கியமும் |
| தரம் | - | 10 |
| அலகு | - | 2.0 இருபதாம் நூற்றாண்டுக் கவிதை |
| உப அலகு | - | 2.3 சுருக்கம் |

## உள்ளடக்கம்

- சுருக்கம் என்பது.
- சுருக்கம் எழுதப்படும் சந்தர்ப்பங்கள்.
- சுருக்கம் எழுதுவதற்கான வழிமுறைகள்.
- சுருக்கத்தின் பயன்பாடு.
- சுருக்கம் எழுதும் போது கவனத்திற்கொள்ள வேண்டியவை.
- மாதிரிப் பயிற்சிகள்
- கணிப்பீடும் மதிப்பீடும்.

## சுருக்கம் என்பது

ஒரு விரிவான உரைநடைப் பகுதியை அதன் கருத்து சிறிதும் பிழையில்லாதவாறு குறித்த அளவில் சுருக்கி திரட்டி சொந்த மொழி நடையில் எழுதுதல்.

## எழுதப்படும் சந்தர்ப்பங்கள்

1. பத்திரிகைத்துறை.
2. விரிவுரைகளின் போது.
3. புத்தக வாசிப்பு.
4. தொகுப்புரை.
5. சுற்று நிரூபம்.
6. செய்தி தயாரிப்புகள்.

## சுருக்கத்தின் பயன்பாடு

- சுருக்கம் இன்று மனிதனின் அன்றாட வாழ்வில் மிக மிக அவசியமாகின்றது, சுருக்கமாகச் சொன்னாலும் கேட்போருக்கு விளங்கும் வண்ணம் அமைதல் வேண்டும்.

- அறிஞர் பலரால் நிகழ்த்தப்படும் சொற் பொழிவுகளோ, ஏனைய விடயங்களோ அப்படியே பத்திரிகையில் வெளியிட முடியாது. அதனால் பத்திரிகைகளில் சொற் பொழிவுகளின் சுருக்கத்தையே பத்திரிகையாளர் வெளியிடுகின்றனர். எனவே பத்திரிகைத்துறைக்குச் சுருக்கம் பயன்படுகிறது.

- கல்வியற் கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும், ஏனைய கல்வி நிறுவனங்களிலும் நிகழ்த்தப்படும் விரிவுரைகளின் முக்கிய அம்சங்களை குறிப்பெடுத்துக் கொள்கின்றனர். அதற்கும் சுருக்கம் பயன்படுகிறது.

- புத்தகங்கள் வாசிப்பவர்கள் அவற்றில் உள்ள முக்கிய அம்சங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்வதற்கு சுருக்கம் எழுதும் பயிற்சி உதவுகிறது.

- சொற்பொழிவின் முடிவிலும். கட்டுரையின் முடிவிலும் ஒருவர் விளக்கிய கருத்துக்களைத் திரட்டிக் கூறுவதற்குச் சுருக்கம் பயன்படுகிறது

- சுற்று நிருபங்கள், அறிக்கைகள். வானொலிச் செய்திகள் ஆகியவைகளைக் குறித்த அளவில் அடக்கக் கூடியதாகத் தயாரிப்பதற்கு சுருக்கமெழுதும் பயிற்சி இன்றியமையாததாகக் கருதப்படுகின்றது.

பொதுவாகச் அவதானிக்கும் தன்மை வளரும்.

ஓர் உரையில் முக்கிய கருத்து எதுவெனவும் முக்கியமற்றது எதுவாகவும் பகுத்துக் காணும் திறமை அதிகரிக்கும்.

அதனால் சுருக்கம் சம்பந்தமாக மேற்குறிப்பிட்ட விடயங்களை மாணவர் கருத்திற்கொண்டு சுருக்கம் எழுதும் பயிற்சியிலும் ஒரு விடயத்தை சுருக்கிக் கூறும் பயிற்சியிலும் ஈடுபடுதல் வேண்டும். கருத்தூன்றி சுருக்கமெழுதும் பயிற்சியினால் ஞாபக சக்தி அதிகரிக்கும்.

# தமிழ் மொழியும் இலக்கியமும்

சுருக்கம் எழுதுவதற்கான வழிமுறைகள்.

- கருத்தூன்றி வாசித்தல்
- பிரதான கருத்தை இனங்காணல்
- துணைக் கருத்துக்களை நிரற்படுத்தல்
- குறிப்பெடுத்தல்
- ஒழுங்குபடுத்துதல்
- தேவையற்றவற்றை நீக்குதல்
- பருமட்டான சுருக்கம் எழுதுதல்
- ஒப்பு நோக்குதல்
- திருத்தமாக மீள எழுதுதல்
- சுருக்கம் படர்க்கையில் மட்டுமே எழுதுதல்
- ஒரே பந்தியில் சுருக்கம் எழுதுதல்

## சுருக்கம் எழுதும் போது கவனத்திகொள்ள வேண்டியவை.

- சுருக்கம் சொந்த வசன நடையிலே எழுதப்படும்.
- உதாரணங்கள், உவமானங்கள், மேற்கோள்கள். வருணனை. அடைமொழிகள் என்பவைகளை முற்றாக நீக்கி விடுதல்.
- கொடுக்கப்பட்ட மூலப்பகுதியில் எத்தனை பந்திகள் இருப்பினும் ஒரு பந்தியிலே சுருக்கத்தை எழுதி முடித்தல்.
- தற் கூற்று வாக்கியங்களைப் பிறர் கூற்று வாக்கியங்களாக எழுதுதல்.

- ஒப்பு நோக்கல் : பருமட்டாக எழுதப்பட்ட சுருக்கத்தில் முக்கிய அம்சங்கள் குறிக்கப்படாதிருப்பின் அவற்றையும் சேர்த்துக் கொள்ளல்.
- திருத்தமாக எழுதுதல் : திருத்தப்பட்ட பரும்படியான சுருக்கத்தை மீண்டும் ஒரு முறை வாசித்துப் பார்த்த பின் குறியீடுகளை அனுசரித்தும் சொல் எண்ணிக்கையைக் கருத்திற் கொண்டு இலகு மொழி நடையில் எழுதுதல்.
- மூலப் பகுதியில் தன்மை முன்னிலை சொற்கள் இடம் பெற்றிருப்பினும் சுருக்கம் படர்க்கையில் மட்டுமே எழுதப்படுதல்.

செய்யுள் இடம் பெற்றால் அதன் பொழிப்பைச் சுருக்கி வசன நடையில் எழுதுதல்.

உரைப்பகுதியில் அமைந்துள்ள வினா வாக்கியம் கூற்று வாக்கியங்கள் அமைதல் வேண்டும்.

நீண்ட வாக்கியங்கள் அமையின் அவற்றிற்குப் பொருத்தமான சொற்றொடர்கள் அல்லது சொற்கள் பயன்படுத்தல் வேண்டும்.

**சுருக்கம் எழுதுதல் - மாதிரிப் பயிற்சி**

**பயிற்சி - 1**

1. அவன் இன்று கண்டிக்கு வந்தால், கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதிக்கும்.

**சுருக்கம்**

**அவன் இன்று கொழும்புக்கு வரமாட்டான்.**

பயிற்சி - 2

சோதிடன் செல்வந்தனை நோக்கி “உனக்கு நிலம், நீர், தீ, வளி, ஆகாயம் என்னும் ஐம்பொருட்களுள் ஏதாவது ஒன்றினால் பேராபத் தொன்று ஏற்படலாம்” எனக் கூறினான்

## சுருக்கம்

ஐம்பூதங்களுள் ஒன்றால் செல்வந்தனுக்கு ஆபத்து ஏற்படலாம், எனச் சோதிடன் கூறினான்.

பயிற்சி - 3

சூரியனின் உதயம், வைகறையின் தோற்றம். மாலையின் பிறப்பு, ஞாயிற்றின் மறைவு, மழை வீழ்ச்சி, இடி முழக்கம், மின்னல் ஆகிய இயற்கை நிகழ்ச்சிகளை ஆதி மனிதன் கண்டு கற்பனை செய்தான். அவ்வியற்கை நிகழ்ச்சியை விளக்க அவன் கட்டுக்கதைகளை உருவாக்கினான்.

## சுருக்கம்

ஆதி மனிதன் இயற்கை நிகழ்ச்சிகளை விளக்க கட்டுக் கதைகளை ஆக்கினான்

## பயிற்சி - 4

அந்தப் படகு கவிழ்ந்ததால் எல்லோருமே இறந்தனர். ஒருவர் கூட நீந்திக் கரையேறவில்லை. என்ன பரிதாபம். சுழியோடிகள் வரவழைக்கப்பட்டனர். அவர்கள் பல மணித்தியாலயங்கள் தேடியும் உயிரற்ற உடம்புகள் மாத்திரமே அகப்பட்டன.

**சுருக்கம்**

அந்தப் படகு விபத்தில் எல்லோருமே இறந்தனர்.

பயிற்சி - 5

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்.

## சுருக்கம்

அறிவுள்ளவரே எல்லாம் உடையவர்

மேலதிக பயிற்சிகளுக்கு

https://docs.google.com/forms/d/10WyndISOmMbxzWdM
Z1hp1BhE6hgZAAvitY0EFPV__bY/edit